Narkeeran

106
1914 III

Madras
ARAYALU & SON
914

C-,1ANR:9
M14

[PRICE 1 ANNA.

நற்கீரன்

சென்னை

முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தலைமைத்

தமிழ்ப் பண்டிதரும்

'வித்தியாபூஷணி' பத்திரிகாசிரியருமாகிய

சதாவதானம் தே. கிருஷ்ணசாமி பாவலர்

எழுதியது

சென்னை

N. வேங்கட்டராயலு அண்ட் சன்ஸ்

1914

[ரிஜிஸ்தர் செய்தது]

[விலை ஒரு அணா.

PRINTED AT
THE 'JYOTISHMATI PRESS'
MADRAS.

முன்னுரை

ஈதோர் புலவர் பெருமானின் அரியகதை. இக்கதை, பண்டையோர்பனுவலுட்கண்டது. பொருமைக் குணத்தால் விளையும் இன்னலை விளங்கப் புகல்வது. கல்விச்செருக்கால் உண்டாம் தீங்கினைத் திகழச் சொல்வது. இளம் சிறார்கட்கு உரைநடைப் பழக்கத்தை உண்டுபண்ணுவது. இடையிடையே இன்புதரும் இனிய செய்யுட்களும் இயையப்பெற்றது.

17|600

இது 'மாணவர் ஓரணா வாசக வரிசை'யின் பாற்பட்டது ஆகும். இதுபோன்ற சிறியநூல்கள் இன்னும் சிலவெளிவரும். அவற்றை மாணவர் மாதம் ஒன்றாகப் பெற்றுக்கற்றுப் பொற்புறுவாராக.

தே. கி.

நற்கீரன்

முடிபுனை வேந்தர் மூவராம் சேர சோழ பாண்டியருள், தமிழ்மகவைத் தம் அகத்துவைத்துப் பாராட்டியதிற் சிறந்தார் பாண்டியர் ஆவர். ஏனை இருவரும் தமிழை ஆதரித்து வந்தார் எனினும், முதல், இடை, கடைஎன்னும் முச்சங்கங்களை ஏற்படுத்திப் புலவர்களைப் பெரிதும் சீராட்டியவர் அப்பாண்டியரேயாம். அப்பாண்டியர் ஆண்டுவந்தநாடு, பாண்டிநாடு, பாண்டியநாடு, தமிழ்நாடு எனப்பெயர்பெறும்.

அந்நாட்டகத்து, மதுரைஎன்னும் அணிநகர் ஒன்று உளது. அம்மதுரைப்பதி, பாண்டிய நாட்டிற்கு 'மாடக்குச்சித்திரமும், மாநகர்க்குக் கோபுரமும், ஆடுஅமைத்தோள் நல்லார்க்கு அணியும்' போன்று உள்ளது. அது காசி, காஞ்சி, துவாரகை, அவந்தி, அயோத்தி, மதுரை, மாயை என்னும் முத்திநகரங்கள்ஏழனுள் ஒன்று. அம்மதுரையினையே, பாண்டியர் தமக்குத் தலைநகர் எனக்கொண்டு, அதில் தமது அரசிருக்கையை நாட்டினர். அந்நகரே, அங்கயற்கண்ணிபங்கனுய் அமர்ந்த சோமசுந்தரன் எழுந்தருளி யிருத்தற்கு இடமாக இருக்கிறது. தன்னைப்புகல் என அடைந்த, அடியரின் பொருட்டு, அவ்விறைவன் அறுபான் நான்கு திருவிளையாடலைப் புரிந்ததும்அவ்விடத்தேயாம். அவ்விடமே கடைச்சங்கம் இருத்தற்கும் இடமாக இருந்தது.

அப்பதிக்கண் இருந்து, பாண்டி நாட்டை ஆண்டுவந்தாருள் சண்பகமாறன் என்பானும் ஒருவன். அவன்கடைச் சங்கக்காலத்து இருந்தவன். கடைச்சங்கத்தின் காலம் இற்றைக்கு ஏறக்குறைய இரண்டாயிரம் வருடத்துக்கு முற்பட்டு இருக்கும் எனக்கூறுவர், காலம் தேர்புலவர். பாண்டியர்பலரும், தமிழில் தேர்ந்த அறிவுடையராய், சங்கப்புலவர் உடன் இருந்து, தமிழ் ஆராய்ந்ததே போன்று, சண்பகமாறனும், அப்புலவருடன் இருந்து தமிழ் ஆய்ந்திருந்தனன்.

அவன், ஓர்நந்தனவனம்வைத்து, அதன்கண் சண்பக மரத்தினைவைத்து வளர்த்து, அதில் உண்டாம் பூக்களை, மாலை எனத்தொடுத்து, சுந்தரேசனுக்கு அணியும் காரணத்தால், அவனுக்கு அப்பெயர் வந்தது. அவன், வங்கிய சூடாமணி என்னும் இயற்பெயரோடு கூடியவன். அவனுக்கு அழகிற்சிறந்த ஓர்மனையாள் உண்டு. அவ்வம்மையார்,

தாதை தன்னினும் தனையர் தம்மினும்
மாதர் மென்மொழி மைந்தர்கள் தம்மினும்
கோதில் கற்புடை யார்தம் கொழுநர்பால்
காதல் கூர்ந்து களிமகிழ் வெய்துவார். [-யும்

கொழுநன் உண்டபின் தாம்உணும் கொள்கை
விழித்து யின்றபின் துஞ்சலும் மென்துயில்
எழுதல் முன்னம் எழுதலுமே அன்றே
பழுதில் கற்புடை பாவையர் செய்கையே.
அன்பர் துஞ்சிடில் துஞ்சுதல் ஆங்கவர்
துன்பம் எய்திடில் தாமும் அத் துன்புறல்

இன்பம் உற்றிடில் இன்புற்றி ருத்தலே
மன்பெ ருந்தவம் கற்புடை மாதர்க்கே.

என்றுபனுவல்கள் பகரும் கற்பிலக்கணங்கள் எல்லாம் ஒருசேரப்பெற்ற, பத்மினிச்சாதிப் பெண்மணியார். அத்தகைய அவ்வம்மையாருடன் கூடி, அச்சண்பாகமாறன் தனது இல்லற தருமத்தைச் சிறிதும் வழாது நடாத்திவந்தனன்.

அங்ஙனம், அவர்கள்வாழ்வுற்று இருக்கையில், இளவேனில் ஈண்டியது. இளம்சோலை வேறு இளம் சோலையையும், தண்ணீர்நிறைந்த தடாகங்கள் மற்றைத் தடாகங்களையும், தண்மதி வேறுதண்மதியையும், தென்றல் மற்றோர் தென்றலையும், தம்வெப்பினை ஆற்றிக்கொள்ளுவான், வேண்டிநிற்கும் இக்காலத்தே, பஞ்சணை துயிலும் பண்புடைச் செலவர் பாடு என்னை ஆவது?

அத்தகைய வேனிற்காலத்து, ஓர்நாள் அந்திப்போதில், சண்பகமாறனும், அவன் மனைவியாரும், வெப்பை ஆற்றிக்கொள்ளுவான் வேண்டி, தமது மாளிகையின் நிலா முற்றத்து உலாவி நின்றனர். அவ்வமயம், ஓர் நறுமணத்து இயைந்த தென்றற்க்காற்று, அவ்விருவரின் வெப்பினை ஆற்றுவான் வந்ததேபோல, மெல்லெலன வீசியது. பாண்டியன் அவ்வாசத்தினை முகர்ந்து, 'என்னை இது! தென்றல், பொழிற்கண்பொலிந்தமலர்களிற்கவர்ந்த, வாசமோ இது! அன்றுஅன்று; ஈதோர்புதுமணம் ஆகஅன்றோ காணப்படுகிறது: இதையோ, புலவர்கள் தெய்வத் திருமணம் எனப் புகல்வது? ஆம், இதுவே ஆகும்.

இதுயாண்டு இருந்து வருகிறது? இதுவரை இத் தெய்வத் திருமணத்தைப்போன்ற மணத்தையான் அனுபவித்தது கிடையாதே.' என்று, அவ்வாசம் எழும்பாசத்திக்கினை நேசத்து ஆய்ந்தனன்.

அவ்வாசம் தன்மனையாள்நிற்கும் இடத்தினின் றும் வரக்கண்டு, அவளை அண்மினன். அண்மி, அவள் அருகுற்று, அம்மணம் அவள்கூந்தலில்உண் டாவதைத் தெரிந்தனன். உவகைபுத்தனன். 'என் னே இது! இவள் பூங்குழலிலோமலர்கள் இல்லை. பூக்கள் இன்றியே இவள் கூந்தல் மணம் தருகிறது! இது வண்டுகள் அறியாவாசம் அன்றோ! இம்மணம் கூந்தற்கியல்போ, அன்றிச்செய்கையோ? செயற்கை என்று உரைத்தற்கு இடன் இன்றே. இவள், பூக் களைக் கூந்தலில் வேய்ந்துளாள் ஆயின், செயற்கை எனக் கூறலாம். அங்ஙனங்கூறப் பூக்களைக் காண்கி லனே! ஈதோர் புதுமையே! இதன் வரலாற்றை அறி தற்கு இயலவில்லையே! இது எனக்குப் பெரும் ஐய த்தை விளைவித்தது. இதனை யான் அறிவது எங்ங னம்?' என்று பெரிதும் எண்ணினன். உண்மை ஒன்றும் அவனுக்குப் புலப்படவில்லை. அதனால், அவன் ஆயிரம் பொன் நிறைந்ததோர் கிழிஒன்றை, சங்கப்புலவர் நிறைந்துள்ள, சங்கமண்டபத்து எதி ராகத்தூக்கி, 'யான் ஐயுற்ற கருத்தைஉணர்த்தும், பாவினைச் செய்து முடிக்கவல்லார், இதனைப் பெ றுக' என்று பலர்க்கும் அறிவித்தனன்.

பண்டைக் காலத்திருந்த புலவர்கள், ஒருவர் மனத்தகத்துள்ள விடயங்களைத் தெற்றென வெளிப் படுத்தும் ஆற்றல்வாய்ந்திருந்தனர். அவர்கள் கண்ட

சுத்திபாடுவோர்எனப் படுவர். அவர்பாடும் அத்தகைய பாடல்களே, கண்ட சுத்தி எனப்படும். சங்கத்திற் சேராத தனிப்புலவர்களும் அத்தகைய ஆற்றல் அமையப் பெற்றிருந்தனர் எனின், சங்கத்திருந்துதமிழ் ஆய்ந்தபுலவரின் பெருமையைப்பற்றி என்னபகர்வது? அவர்கள் எல்லோரும் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள். தெய்வத்தை நேரிற்கண்டு பேசுபவர்கள். திரிபுரம் எரித்த அவிர் சடைக்கடவுளும், சங்கப் புலவருள் ஒருவராக இருந்தனர் எனின், அப்புலவர் எத்துணைச் சீரியராக இருந்திருப்பர்?

ஓர்கால், அப்புலவர்கள் சுந்தரேசப் பெருமான் சன்னிதி அடைந்து. 'இறைவ! கற்றோரும் மற்றோரும், புலவரெனக் கூறி, எம்முடன் வந்துசேர எண்ணுகின்றனர். அஃது எங்கட்குப் பெரிதும் தாழ்வாக இருக்கிறது' என்று, அக்கடவுள்பால் முறையிட்டனர். அதற்கப்பரமன், 'புலவீர்! நீவிர் கவலற்க. இப்பலகை யினைக்கொண்டு சென்மின். இது, கற்றோருக்கே இருக்க வளர்ந்து இடம் தரும். ஏனையோர்க்குத் தராது.' என்று, ஓர் பலகையை ஈந்தனன். அந்தப் பலகையே, சங்கப்பலகை என்னும் பெயர் பெறும். அதனை, அப்புலவர் ஏற்று, வங்கிய சேகரபாண்டியன், தமக்கு அமைத்துத்தந்த சங்கமண்டபத்து அமைத்து, அதன்மீது இருந்து, தமிழ் ஆய்ந்திருந்தனர். அத்தகைய பெருமை வாய்ந்த புலவர்களுள் மிகச்சிறந்தார், நற்கீரர், கபிலர், பரணர், இடைக்காடர் முதலானோர் ஆவர்.

அப்புலவர்கள் எல்லாம், அரையன் உட்கிடையை வெளிப்படுத்துவான்வண்ணம், பெரிதும் ஆராய்ந்து, பலப்பலப்பாக்களை இயற்றி, பாண்டியன் முன்கொண்டு சென்றனர். பாண்டியன், அப்பாக்களைப் படித்துப் பார்த்து, தன்கருத்து, அவற்றுள் ஒன்றிலேனும் அமைந்திராமையின், அவற்றை வியந்து மேற்கொள்ளவில்லை. அதனைக் கண்ட புலவர்கள், பெரிதும் வெள்குற்று, மனம் உடைந்திருந்தனர்.

பாண்டியன் கருத்தைப் பாவில் அமைத்துப் பாடும் திறம் உற்றார், ஒருவரேனும் இலர் ஆதலின், அவன் கட்டிய பொற்கிழி, அறுபடாமல் அங்ஙனே கிடந்தது. அதுகண்டு; மன்னன், என்று நமது ஐயம் அகலுமோ என்று, ஏக்கம் உற்றிருந்தனன்.

அங்ஙனமாக, அம்மதுரைக்கண் மறையவர் குலத்துத்தோன்றிய, தருமி என்பான் ஒருவன் இருந்தனன். அவன், கல்வியிற் றேர்ந்தவன் அல்லன் ஆயினும், கடவுளிடத்து அன்பு பூண்டொழுகும் ஓர் பக்தனாக இருந்தான். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்ற முதுமொழியின் பொருளை நன்குணர்ந்தவன்.

உண்மையில், கடவுளைப் போற்றார் கசடர் அன்றோ? இதுபற்றி அன்றே ஓர் பெரியார்,

வீட்டுத் தலைவனின் தாள்வணங் கார்தம் விரிதலைசும்
மாட்டுத் தலைபட்டி மாட்டுத் தலைபுன் வராகத்தலை
ஆட்டுத் தலைவெறி நாய்த்தலை பாம்பின் அடுந்தலைகல்
பூட்டுத் தலைவெம் புலைத்தலை நாற்றப் புழுத்தலையே.

என்று, மொழிந்துள்ளார். ஆதலால், மனிதராய்ப் பிறந்தோர்க்குக் கடவுள் வழிபாடு இன்றியமையாதது. கடவுள் வழிபாடு செய்யாப் பேதை, பிறந்தும் பிறவாதவனேயாகும். எனெனின், நாம் பிறவி எடுத்ததால் அடையவேண்டிய பயன், இறைவன் அடியிணை போற்றி, அவன் அருளைப் பெறுவதே. அவன் அருள்பெறாத அறிவிலிகளைப் பிணம் எனின் வரும் இழுக்கு என்னை? இதுபற்றியே நமது தாண்டக வேந்தர்,

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப்பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனைமற்றக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே.

எனப்பகர்ந்துள்ளார். இக்கருத்துக்களை, அத்தருமி நன்குணர்ந்தவன். இம்மை அம்மைகளில், நாம் துய்க்கும் இன்பம், அவ்விறைவன் தந்ததே என்பதைத் தெரிந்த அறிஞன். உலகினை, ஆக்கி அளித்துத் துடைப்பது, கடவுளின் திருவிளையாடல் என்றதைத் தெரிந்த சீமான். 'அவன் அன்றி ஓரணுவும் அசையாது' எனும், ஆப்தமொழியின் அருத்தத்தை அறிந்த அன்பன். அவன், அடியர்க்கு இன்னருள் பாலித்தற் பொருட்டு, திருவுருக்கொண்டு விளங்கும், சுந்தரேசப் பெருமான்சன்னிதிக்கு,

நாடொறும்சென்று, அவ்விறைவனை வழிபட்டுவரும் வழக்கம் உடைய வண்மையாளன்.

அவன், ஓர்நாள் சங்கம் அமைந்துள்ள மறுகின் வழியே சென்றனன். சங்கமண்டபத்து, எதிராகத் தூக்கி உள்ள, பொற்கிழியினைக்கண்டனன். அதன் வரலாற்றினை அறிந்தனன். அறிந்து, அப் பொற்கிழியினைப்பெற அவாக் கொண்டனன். அதனைப் பெறும் வகைதேருது கவலைபூண்டனன்.

பின், தன்னைத் தொழுவார்க்குத் தோன்ருத் துணையாக இருக்கும் தூயனிடம் சென்று, தன்கருத்தை வெளியிடின், தனக்கு அவன் இன்னருள் புரிவன் எனத்தேற்றம் கொண்டு, சன்னிதி அடைந்தனன். அக்கடவுளை, அவன் மனமொழி மெய்களின் எண்ணிவாழ்த்திப் பணிந்தெழுந்து, ‘எவர்க்கும் மேலாம் இறைவ! தந்தை இலேன்! தனியனுய் வருந்துகின்றேன்! அப்பனும் நீர்! அம்மையும் நீர்! எல்லாம் நீர். ஏழையேற்குத் தந்தைதாயாய் உள்ள தேவரீர், எற்குவேண்டியவற்றைச் செய்தல் வேண்டுவது தமது உரிய கடமை அன்ருே! யான் இதுகாறும் வறுமைவாய்ப்பட்டு, மணம் இன்றிக் கிடக்கிறேன். நன்மணம் செய்து கோடற்கு, மணநாடுகிறேன். என்னைக் கைவிடாது என் எண்ணத்தை இனிது முடித்துத் தருதற்கு, ஈதே நல்ல அமயம்! பாண்டியன் கட்டியபொற்கிழி எற்குரிமையாம்படிசெய்ய, தேவரீர் திருவுளம் பற்றவேண்டும்! எல்லாம் வல்ல இறையே! ஈதே அடியேன் விண்ணப்பம்’ என்று, வேண்டி நின்றனன்.

அங்ஙனம், அவன் வேண்டியபோது கடவுள் அவனுக்கு அருள்புரியாதும் இருப்பரா? இறைவன், தன்னைப்புகல் என அடைந்த அடியரைக் கைவிடாது, அவர்கள் வேண்டுவனவற்றை, வேண்டியாங்குதவும், கருணையாளன் அன்றோ? இதுபற்றியன்றே, நாவுக்கரையரும்,

தூண்டு சுடர் அனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க்கு ஆற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட்டுறையும் மணாளன் தானே.

என்று, நவின்றுளார்.

தன்னைச் சரணடைந்த தருமியின் வேண்டுகோட்கு மனம் இரங்கிய இறைவன், 'தருமி! என் அன்ப! வருந்தற்க. நீ விரைவில் மணம் செய்து கொள்ளப் பெறுவை. இப்பாட்டினைக் கொடுசென்று, பாண்டியன் கரத்துக்கோடு. அவன், அப்பொற்கிழியினை நினக்குத் தருவன்.' என்று, மணம் ஆய்ந்து திரிதலையே வாழ்க்கையாக உடைய, அழகிய சிறையினை உடையவண்டே! நீ ஆய்ந்தறிந்த பூக்களுள், பழகிய மிக்கநட்பால், விருப்பத்தால் பொய்கூறுது, மயில்போலும் சாயலும், நெருங்கிய பற்களும் உடைய பாண்டியன் மனைவியின் கூந்தலின் உள்ள, நல்ல வாசத்தினைப்போல, வாசம் உற்ற, நல்ல பூக்

களும் உளவோ? கண்ட உண்மையைச் சொல்: என்னும்பொருள் அமைந்த,

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி!
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயில் இயல் செறி எயிற்றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே

என்றபாடலை எழுதித்தந்தனன். அதனைத் தருமி, தன் இருகையால் ஏற்று வணங்கி, பெருமானிடம் விடைகொண்டுமீண்டான். புதைபொருள் கண்டெடுத்தான் உள்ளமேபோல், உவகைபூத்தான். பின்னர், அவன் அப்பாவினைச் சங்கப் புலவர் நிறைந்த கழகத்திற் கொண்டு சென்று, அவர்பால் நீட்டினன்.

அப்புலவர், அப்பாட்டின் பொருள் நோக்கினையும், சொல்நோக்கினையும் உணர்ந்து, 'நன்று நன்று' என்று, உவகை கூர்ந்து; தருமியைப் பாண்டியனிடம் அழைத்துச் சென்றனர்.

பாண்டியன், அவர்கள் வருகையை ஓர்ந்து, அவர்கட்கு ஆதனம் அளித்து, அவர்களை இருக்கச் செய்து; பின், அப்பாட்டினைப் பெற்றுப் படித்தனன். தன்கருத்து, அதில் வெளியிடப் பட்டிருத்தலைக் கண்ட அம்மாறன், அளவிலா இன்பத்து ஆழ்ந்தவனாய்,பெரிதும் தன்சிரம் துளக்கி, 'ஐய!நீயிர் இப்புலவருடன் விரைந்துசென்று, அப்பொற்கிழியினைக் கொள்ளுதிர்,' என்று, தருமியை நோக்கி மொழிந்தான்.

தருமி, சண்பக மாறனிடம் விடைபெற்று, புலவருடன் பொற்கிழி கட்டிய இடத்திற் சென்று,

அதனை அறுக்கத் தொடங்கினன். அவ்வமயம், வெளியே சென்றிருந்த நற்கீரன், அவ்வழி வந்தனன். தருமி, கிழியை அறுப்பதைக் கண்டனன். 'இக்கிழியை இவன் அறுத்தற்குக் காரணம் என்னை' என்று, சூழ்ந்துள்ள புலவரைச் சீறிக்கேட்டனன். அவன் நெற்றி, கோபத்தாற் சுருங்கியது. புருவம் மேல் ஏறியது. மொழிதடுமாறியது. அறுத்துவிட்ட கோழியின் உடலைப்போல, அவன் உடல் துடிதுடித்தது. தருமி அதனைக் கண்டு அச்சுற்று, வாளா இருந்தனன். சூழ்ந்திருந்த புலவர், கீரனுக்கு நடந்த வரலாற்றைக் கூறினர்.

கீரன்:—(தருமியைப்பார்த்து) நீகொண்டுவந்த பாட்டைப்பாடினேன் யாவன்? நீயே பாடினையோ, அன்றி, வேறொருவன் பாடித் தந்தனனோ?

தருமி:—ஐய! நான்பாடவில்லை. எனக்குப் பாடும் திறமும் இல்லை. வேறொருவர் பாடித்தந்தனர்.

கீரன்:—வேறொருவன் எனின், அவன் யாவன்?

தருமி:—அவர் ஒரு புலவர்.

கீரன்:—அவன் யாண்டுள்ளவன்?

தருமி:—அவர் இருப்பது இம்மதுரையம் பதியே.

கீரன்:—இம்மதுரையம் பதியில், எங்களைவிட வேறோர் புலவனும் இருக்கிறானா?

தருமி:—ஆம், இருக்கின்றனர். அவர் பெரும் புலவர்கட்கெல்லாம் பெரும் புலவர். அவர் பெருமையினை அறியாது, நீர் அவரை இகழ்ந்துரைத்தல் தகாது.

அது கேட்ட கீரன் சினந்து, புலவரை நோக்கி, 'உங்கட்கு வெட்கமில்லையா? புலவர் எனப் பெயர்

17600 -600 O-1 JANR 9 ANY

கொண்டுள்ளீரே நீர். நம்மைவிட அன்னியன் ஒருவன் அப்பொற்கிழியினைப்பெற, நாம் பார்த்திருக்கலாமா? கற்றறியான் ஒருவன், இக்கிழியினைக் கொண்டு செல்லின், நமக்கு என்ன பெருமை உளது? கொண்டுவந்த பாட்டு அருமையாய் இருந்தால் என்ன? அவ்வளவு அருமையான பாட்டைக் காட்டும், பார்ப்போம்,' என்று, அழுக்காற்றால் முன்னினும் அதிககோபம் கொண்டு கேட்டனன்.

ஆண்டுச் சூழ்ந்துள்ள புலவர் தருமியை நோக்கி, 'நீயிர் கொடுவந்த பாவினை, அவரிடம் காட்டும்,' என்ன, தருமியும் அப்பாட்டினைக் கீரனிடம் தந்தான். அதனைக் கீரன் படித்துச் சுவைமிக்கிருத்தலைத் தெரிந்து, 'இது முழுவதும் குற்றமாக உள்ளது. வழுவமைந்த பாடலைக்கொண்டு வந்த நீ, இக்கிழியினைக் கொள்ள அருகன் அல்ல. இதைப் பாடித்தந்தானை அழைத்துவரின், அவன் பால் இப்பாட்டின் வழுக்களை வெளியிடுவல்யான். நீ சென்று அவனை விரைவில் அழைத்துவருதி' என்று பொறாமையால் புகன்றுறைத்தனன்.

தருமி அவனின் நீங்கி, 'அந்தோ! கைக்கெட்டியது வாய்க் கெட்டாமற் போயதே! வெண்ணெய் திரளும் அமையத்துக் குடம் உடைந்தது போலாயிற்றே! இவன் எனக்கென இப்போது வரவேண்டுமா! சிறிது நேரம் தாழ்த்து வரலாகாதா! இதுவும் என்கெட்டகாலமோ! இடுவார் பிச்சையை ஈயார் கெடுப்பது போல் ஆயிற்றே! எனக்குப் பொருள் கிடைக்காமற் போனல் போகிறது. முற்றுணர்

வுடைய முன்னோன்மொழிந்த பாட்டைச் சிற்றறி வுடையான் குறைகூறினனே!' என்று, மனநொந்து, அப்பாவினை இயற்றிய பாவலன் சன்னிதிக்கண் சென்றான். சென்று, இறைவனை வணங்கி, அவன் தந்தபாட்டை, அவன் முன்னர்வைத்து,

"வறுமைநோய் பிணிப்பப் பன்னால்
வழிபடும் அடியேன்நின்பால்
பெறுபொருள் இழந்தேன் என்று
பேசிலேன் யார்க்கு மேலாம்
கறைகெழு மிடற்றோய்!
நின்றன் கவிக்குற்றம் சில்வாழ்நாள் சிற்
றறிவுடைப் புலவன் சொன்னால்
ஆருனை மதிக்க வல்லார்."

என்று முறையிட்டனன்.

அதைச்செவி சாய்த்த அடியார்க்கு எளியனாம் அப்பரமன், தருமியின் மனக்குறையினை அகற்ற வும், கீரனின் தீட்குணத்தைப் போக்கவும், ஓர்புலவ னாக வடிவுகொண்டனன். கொண்டுழி, ஆயிரங்கோடி மதனர் ஒருருக்கொண்டது போல இருந்தது, அ வன் வடிவம். அவன், மகரகண்டியும் பதக்கமும் அணிந்தமார்பும், ஆழி பூண்டவிரலும், பூதி அணி ந்த நெற்றியும், விலையில்லா ஆடையும் உடையவ னாய்த் தருமிமுன்தோன்றி; அவனை உடன் அழை த்துக்கொண்டு, கழகத்திற்குச் சென்று, புலவர்கள் எதிர்நின்று 'நங்கவிக்குக் குற்றங் கூறியோன் யாவ ன்' என்றனன். அது கேட்டகீரன் 'யானேமொழிந் தனன்' என்று செருக்குடன் புகன்றான்.

புலவன்:—நீயோ என் பாவைக் குறைகூறியவன்?

கீரன்:—ஆம், யானே.

புலவன்:—அப்படியோ!

அங்கம் வளர்க்க அரிவாளின் நெய்தடவிப்
பங்கம் படஇரண்டு கால்பரப்பிச்—சங்கைக்
கீர்கீர் என அறுக்கும் கீரனோ என்கவியைப்
பாரில் பழுதென் பவன்? [துகுலம்

கீரன்:—சங்கறுப்ப தெங்கள் குலம் சங்கரனாற் கே
பங்கமுறச் சொன்னால் பழுதாமோ—சங்கைக்
கீர்கீர் என அறுப்போம் சங்கரனார் போல
இரந்துண்டு வாழோம் இனி.

புலவன்:—அஃதிருக்கட்டும்; குற்றம் என்றனையே, எக்குற்றம் கண்டு சொற்றனை?

கீரன்:—அப்பாட்டில் சொற்குற்றம் இன்று; ஆனால், பொருட்குற்றம் உளது.

புலவன்:—பொருட் குற்றமேயோ! நன்றுகூறினை. என்னையோ அப்பாவில் பொருட்குற்றம்?

கீரன்:—அப்பாட்டில், மாதர்கூந்தற்கு இயற்கையாகவே மணம் உளதெனக் கூறப்பட்டுள்ளது. அதுபொருத்தம் உடையதன்று. கூந்தற்கு இயல்பாக மணம் இல்லை; செய்கையாலேயே மணம் உண்டாகும். இதுவே அப்பாவின் கண் உளதாய பொருட்குற்றம்.

புலவன்:—நல்ல பொருட்குற்றம் கண்டனை! கூந்தற்கு மணம் இயற்கையில் இல்லையோ?

கீரன்:—எங்ஙனம் இருக்கும்?

புலவன்:—அற்றாயின், பத்மினிசாதிப் பெண்டிர்கட்கும் அப்படியோ?

கீரன்:—ஆம், அவர்கள் கூந்தலின் மணமும் இயற்கையன்று.

புலவன்:—அது போகட்டும்; கற்பகநிழலில் அற்புடன் அமரும், பொற்புடை அரம்பையர் கூந்தற்கோ?

கீரன்:—அவர்கள் கூந்தலினும், மந்தார முதலிய பூக்களின் செயற்கையால், வாசம் உண்டாகிறது.

புலவன்:—அவை எல்லாம் செயற்கையாயின் ஆகுக. நீ வழிபட்டேத்தும் காளத்திநாதர் பக்கத்தமர்ந்த ஞானப்பூங்கோதையின் கூந்தற்கு, மணம் இயற்கையோ, அன்றிச் செயற்கையோ?

கீரன்:—அவ்வம்மையார்-கூந்தற்கும்-இயற்கை-மணம்-இன்று.

அதுகேட்ட, புலவனாய்வந்த இறைவன், கீரனுக்கு நல்லறிவு சுடர்கொளுத்துவான் வேண்டி, தன் நெற்றிக்கண்ணைச் சிறிதுகாட்டினன். கீரன் அதனைக்கண்டு, வந்துளான்பரனே எனத்தெரிந்தும், பொறாமையும் கல்விச்செருக்கும் மிக்க மனத்தனாய், 'தான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்' என்றபடி, இறைவனை நோக்கி, 'ஐய! நீவிர் நெற்றிக்கண்ணைக் காட்டின், யான் என் கொள்கையின் நீங்குவன் என மனக்கொண்டீரோ? உம்பரார்பதியைப் போல, உமக்கு உடன் முழுவதும் கண்ணாயினும், அஞ்சுவனல்லேன்யான். ஆதலின், நீர் சொற்றபாடல் குற்றமே.' என்றான்.

அக்கால், பரமன் தன் நெற்றிக்கண்ணைத் திறந்து, அவனை நோக்கினன். கீரன் அக்கண்ணினின்றும் உண்டாயவெப்பினுக்கு ஆற்ருனாய், பக்கத்துள்ள பொற்ருமரைப் பொய்கையுட் போய்விழுந்தனன். ஆங்கும், வெப்பம் மீதூரப்பெரிதும் வருந்தினன். புலவனாய் வந்த தலைவனும் தன் உருக்கரந்தனன்.

அந்தோ! புலவருட் சிகாமணியாய் விளங்கிய கீரன், அக்கதிக்குள்ளாயது, அவன்கொண்ட பொருமைக் குணத்தானும் கல்விச்செருக்கானும் அன்றே! ஒருவன் கற்றுவல்ல புலவனாய் இருக்கினும், அத்தீயகுணங்கள் அவன்பால் உண்டாயின், அவை அவனை அடியோடு அழித்தற்குக் காரணமாக இருக்கின்றன. அறியாதார் பிறருடைய கல்விச்செல்வத்தையும் பொருட்செல்வத்தையும் கண்டு பொருமை அடைகின்றனர். பெரும்பாலும் பொருமைக்குணம் புலவரிடத்தேயே குடிகொண்டிருக்கிறது. அவர்கள், பதரினை எரிக்கும் தீப்போல, பொருமைக்கனல் தன்னை உடையான் மனத்தை எரித்துவிடுகிறது என்றதைத் தெரிந்தும், அதனின் நீங்குகின்ருர் இல்லை. பொருமைகொண்டான் மனம், எப்போதும் துன்பத்திற்கே இடம் தந்து நிற்கிறது. அம்மன முடையான், எப்போதும் இன்படைகிறது கிடையாது. இதுபற்றியே, தெய்வப்புலவர்.

'ஒழுக்காருக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு'

என நமக்கு அறிவுறுத்தி யுள்ளார். அழுக்காறுடையான், இம்மையில் துயர் கொண்டு கவலுறு

வதேயன்றி, மறுமையிலும் மீளாநரகடைகின்றனன். இதையே செந்நாப் போதார், தமது தெய்வத்திருக் குறளுள்,

'அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்'

எனக் கூறியுள்ளார். இக்குறளையே

மேருவுடன் இகலி விந்தமலை வீறழிந்து
சேருநிலண் ஊடே சிவசிவா—ஒரும்
அழுக்கா றெனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்

என்று உதாரண முகத்தானும், [மறுமையினும்

ஒழுக்கா றொழிக்கும் பொருளனைத்தும் ஒழிக்கும் இம்மை
வழுக்கா றனைத்தும் உறுவிக்கும்மருங்குளார்க்குங் கேடுறுக்கும்
இழுக்கா றுடைய எரிகிரையத் தேய்க்கும் இதனால் எமகண்டா
அழுக்கா றுய பெரும்பிழையை அமரரிடத்தும் புரியற்க

என்று விரித்தும், பெரியோர்கள் கூறியுள்ளனர். அப்பொறாமை என்ற தீக்குணம் ஒருவன்பால் இருப்பின், அது ஏனைய தீக்குணங்களையும் தனக்குத் துணைகொள்ளும். கீரன், பொறாமை காரணமாக அன்றோ, இறைவனுரையை மாற்றச் செருக்குற்றான். கல்விச்செருக்கை அவன்பால் அழைத்தது, பொறாமையே அன்றோ? இனி, செருக்கும்மனிதனைக் கொல்லும் வாள் எனச்சொல்லலாம். பணம் உடையார் பலர், பிறரைக்கண்டு செருக்குறுகின்றனர். அவரினும், கல்வியுடையார் பெரிதும் செருக்கித் தலைகவிழ்கின்றனர். முற்றும் உணர்ந்தவன் என்று எவனேனும் இவ்வுலகில் வெளிவருவனோ? ஒவ்வொருவனும் ஒவ்வொருவித்தையில் தேர்ந்தவனாக இருப்

பான். ஒருவித்தையைக் கற்[று] ன் மற்றவனை மானுட ஏக்கண்டு செருக்குறல் மதிக்குறைவன்றோ கள் ர் எத்துணைக் கல்விகற்றாராயினும், அவர் மா அரைகுறை கல்விமான்களே யாகும். அங்ஙன க, அவர்கள் செருக்குக்கொள்ளுதல் தகுதியன்று.

முற்றும் உணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க—சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தினால்

கற்றனைத்ம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்.

எனும் பெரியோர் வாக்கு எழுந்தது, நாம் அடங்குதற் பொருட்டே அன்றோ?

'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.'

என்று வள்ளுவர் சொற்றதும், நாம் செருக்கிலராய் வாழ்தற்கேயாம். நாம் அடக்கம் இன்றி, செருக்குற்றுவாழ்வோமாயின், நம் பால் இருக்கும் அரிய குணங்களும் தாழ்வடைகின்றன. இதுபற்றியன்றே,

கற்றறிவு குலமேன்மை கருணை பெரும்
புகழ்ச் செல்வம் கைம்மா றெண்ணு
துற்றுதவும் கொடைசீர்மை ஒழுக்கம் அரும்
தவநியமம் உறவின் கேண்மை
மற்றெதிரி லாத்திண்மை வாய்மைமிகும்
தூய்மைகுண வனப்பியாவும்

பெற்றிடு ... டக்கம் இலாப் பெருமிதத்தால்
இத்தனைக் ... மையுண்டாமால்.

என, ஓர் ... ர் உரைத்தனர். அதனால் ஒரு வன் அத்தீய கு ... ளை அறவே ஒழித்தல் வேண்டும் என்பது பெறப் ... தன்றோ? இனி, அக்குணங்களை ஒழித்தலின் நீங் ... கீரன் கதி என்ன ஆயிற்றென் பதைப் பற்றி ... ர்ப்போம்.

கீரன் ... கையில் வீழ்ந்து துன்புறுவதை யும், புலவர ... வந்தார் திருவுருக் கரந்ததையும், கண்ட புல ... ள், பெரிதும் அச்சம் அடைந்தனர். வந்தவன் சுந் ... ரசப் பெருமான் எனத்தெரிந்தனர். தருமிக்குப் பொற்கிழியை அறுத்துத் தந்தனுப் பினர். கீரன் இருந்ததால் பொலிவெய்திய தமது கழகம், அரையன் அற்ற நாடேபோலப் பொலி வழியக் கண்டு, மனநொந்தனர். என்செய்வார் அப் புலவர்! சொற்பொருள் வடிவாய் அமர்ந்த இறைவ னிடம் கீரன்வாதிட்டனனே என்று, அவர்கள் பெரிது ம் ஏங்கினர். அவனுக் கெய்திய துன்பம் என்செய் தால் தீருமோ என்று திகைத்தனர். அத்துன்பம், இறைவனால் அன்றி, ஏனையோரால் தீரா தெனத் துணிந்தனர்.

பின்னர், அவர்கள் எல்லவரும் ஒருமனப் பட் டோராய், வெள்ளிமலை பெயர்க்க வந்த, இலங்கை வேந்தனை அழித்து, அவற்கு இன்னருள் புரிந்து, பேரும் வாளும் அளித்த, பெருங்கருணைத் தடங் கடலாகிய பெம்மானை மனத்தகத் தெண்ணி,

திருத்தனே சரணம் சரணம் மறைச்சென்னிமேல்
நிருத்தனே சரணம் சரணம் நிறைவேத நூல்

அருத்தனே சரணம் சரணந் தி... நல்வாய்
ஒருத்தனே சரணம் சரணங்க... ...க்கு நாம்

பாயுமால் விடைமேல் வருவே... ல்உயிர்க்கெலாம்
தாயும் தந்தையும் ஆகுநின் ... ளிதாமரைக்
கேயு மாதவன்போல் நல்லதீப ... றினோர்க்கு
ஆயும் இன்பமும் துன்பமும் ... வதாதலால்.

அத்த கற்ற செருக்கின் அறிவு... ன் நின்
வித்தகக் கவியைப் பழுதென்ற ... ாடையால்
மத்தகக் கண் விழித்துப் பின் மல... பொன்
முத்தகக் கமலத்திடை வீழ முடுக்கி...

இருள் நிறைந்த மிடற்றடிகேள் இனி... ப்பிழையைக்
கருணை செய்து பொறுத்தருள்!
என்று துதித்தனர்:

அதுபோது, கடவுள் தம் தேவியாம் உமையோடு அப்புலவர் முன் தோன்றினர். புலவர் எல்லாம் அவரைப்பணிந் தெழுந்தனர். குளத்தில் வீழ்ந்து வருந்தும் கீரன், 'எம்பெரும! கல்விச் செருக்கால் கசடன் ஆனேன். பொருளைக் குணத்தால் புன்மை கொண்டேன். அடியேன் இழைத்த குற்றத்தினைப்பாராட்டாது, அடியேனை இந்நோயின் நீக்க வேண்டும்' என்று வேண்டித் திருக்கைலை பாதி காளத்தி பாதி வெண்பா அந்தாதியைப் பாடினன். அதனைச் செவிசாய்த்த பரமன், அவனை அப்பொய்கையி னின்றும் கரை ஏற்றினன். தம்கரம் ஈந்து தன்னைக்கரை ஏற்றிய அப்பெருமானைக் கவிஞன் மனங் கரைப்பப்பாடி, ஆனந்தக் கூத்தாடி நின்றனன். ஈசன், அங்குள்ளார் எவர்க்கும் இன்னருள் புரிந்து கைலை ஏகினன்.

---

* நூற்கள், நக்கீரன் என்று கூறும்புலவர் பெருமானையே, யாம் நற்கீரன் என்று ... கோட்பாட்டின் உரைத்தாம்.